6. அறிவிப்பு

முக்கியப் பிரமுகர்கள் இருக்கையிலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் மணிப்பூர் சட்டப் பேரவைத் தலைவருக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மணிப்பூர் சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் சபம் புதிசந்திர சிங் அவர்கள், மணிப்பூர் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. கே. ரஞ்சித் சிங் அவர்கள், மணிப்பூர் சட்டப் பேரவை உறுப்பினர்கள் டாக்டர் கே.எச். லோகென் சிங், திரு. ஈ. த்விஜமணி சிங் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் முக்கியப் பிரமுகர்களுக்கான இருக்கைகளில் அமர்ந்து பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிட வந்துள்ளார்கள். உறுப்பினர்கள் சார்பில் அவர்கள் அனைவரையும் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

On behalf of the Members of our Assembly, I welcome Dr. Sapam Budhichandra Singh, Hon. Speaker of Manipur Legislative Assembly, Dr. K. Ranjit Singh, Hon. Minister for Public Works, Dr. K.H. Loken Singh, MLA, Thiru E. Dwijamani Singh, MLA and officials, who are now witnessing the proceedings of the House.

5. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)
(ஆ) கோரிக்கை எண் 7–மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)
(இ) கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)
—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உதயம் சண்முகம், தொடர்ந்து பேசுங்கள்

திரு. உதயம் சண்முகம்: என் தொகுதிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கோரிக்கைகள்.

ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பு அறந்தாங்கி, மீமிசல் மற்றும் மணமேல்குடியில் கட்டப்பட்ட காவல் துறைக் கட்டடங்கள் பழமையாக இருக்கின்றன. அவற்றைப் புதிதாகக் கட்டித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.